# கிறிஸ்தவரும் அரசாங்கமும் (5:12-42)

*நமது கடந்த பாடத்தில், அப்போஸ்தலர்களுக்கு ஏற்பட்ட உபத்திரவத்தை 5:12-42ல் படித்தோம். இதைப் படித்த சிலர் அப்போஸ்தலர்கள் சந்தித்த அறைகூவலை முழுமையாகப் புரிந்திருப்பார்கள். கடந்த காலத்தில் இவர்களும் கூட பயமுறுத்தப்பட்டு, இயேசுவின் நாமத்தில் பிரசங்கிப்பதை விட்டுவிடும்படி கூறப்பட்டிருக்கக் கூடும். சிலர் கைது செய்யப்பட்டு அடிக்கப்பட்டனர்; சிலர் தங்கள் விசுவாசத்திற்காக மரித்தும் உள்ளனர். இவர்களைப் பொறுத்தமட்டில் தேவனுக்கா அல்லது மனுஷருக்கா யாருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பது ஸ்படிகம் போலத் தெளிவாய் இருந்தது. இருப்பினும் நம்மில் அநேகருக்கு இது இன்னும் அவ்வளவு தெளிவாய் காணப்படாது. "நம்மை ஆளும் அதிகாரிகளுடன்" நமது உறவு குறித்து இன்னும் சற்று ஆழமாய்ப் பார்ப்பது பயனுள்ளதாய் இருக்கும் (ரோமர் 13:1).*

## அடிப்படையான விதி: நாட்டின் சட்டங்களுக்குக் கீழ்ப்படியுங்கள்

இதுவரைக்கும் நமது பாடத்தில் மூன்று கொள்கைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன. அவைகளை நாம் மறுபடியும் கண்ணோக்கி, விவரித்து, அவைகளை நடைமுறைப் படுத்துவோம். முதல் கொள்கையாவது, ஒரு பொதுவான விதியாக, நாம் வாழுகின்ற நாட்டின் சட்டங்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். உலக முழுவதிலுமே, அதிகாரத்திற்கு மரியாதை காட்டுவதென்பது குறைவாக உள்ளது ஒரு பிரச்சனையாகவே இருக்கின்றது. பழைய ஏற்பாட்டின் காலங்களில், "அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிபோனபடி செய்துவந்தபோது" (நியா.

*21:25), பெரும் குழப்பமே ஆட்சி செய்தது.*

*நாம் எப்பொழுதுமே சமுதாயத்தின் அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும், ஆனால் இது, அரசாங்கம் எப்பொழு துமே நீதியானதாகவோ அல்லது எப்பொழுதுமே நல்லதாகவே உள்ளது என்பதற்காக அல்ல. பவுல் மற்றும் பேதுருவால் பேசப்பட்ட அதிகாரிகள் ரோமாபுரி அரசாங்கத்தைச் சார்ந்தவர் களாய் இருந்தனர், அது நீரோ இராயனின் தலைமையில் செயல் பட்டது. நாம், நமது நாட்டின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிவது, அவைகளை நாம் ஒப்புக் கொள்ளுவதாலோ அல்லது அவைகள் அறிவுப் பூர்வமானவை என்பதாலோ அல்ல; மாறாக இது தேவனுடைய சித்தம் என்பதால் நாம் இவற்றுக்குக் கீழ்ப்படி கிறோம். பவுல், அரசாங்கம் என்பது "தேவனால் உண்டா யிருக்கிறது" என்றும் அதிகாரிகள் "தேவனுடைய ஊழியக்காரர் களாய்ச் செயல்படுகின்றார்கள்" என்றும் கூறினார் (ரோமர் 13:1, 4). பேதுரு, "நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள் ... அது தேவனு டைய சித்தமாயிருக்கிறது" (1 பேது. 2:13, 15) என்று கூறினார்.*

## *அடிப்படையான விதிவிலக்கு: நாட்டின் சட்டமானது தேவனுடைய சட்டத்தை மீறும்போது*

*இரண்டாவது கொள்கை என்பது, இவ்விதிக்கு ஒரு விதிவிலக்காக உள்ளது, இது மனிதரின் சட்டங்கள் தேவனு டைய சட்டத்துடன் நேரடியாக முரண்படும்போது வருவதாய் உள்ளது. நடபடிகள் 4 மற்றும் 5ல் முரண்பாடு தெளிவாய்க் காணப்படுகிறது: மனிதர்கள், "கிறிஸ்துவின் நாமத்தில் பிரசங் கிக்கக் கூடாது" என்று கூறினர்; தேவனோ, "கிறிஸ்துவின் நாமத்திலே பிரசங்கியுங்கள்" என்று கூறினார். பழைய ஏற்பாட்டில் பார்வோன் ராஜா, "எல்லா ஆண் பிள்ளை களையும் கொலை செய்யுங்கள்" என்றான் (யாத். 1:15-22), ஆனால் தேவனோ, "கொலை செய்யாதிருப்பாயாக"[1] என்றார். சமீபத்திய காலங்களில், மனிதர்கள் "தேவனை ஆராதிப்பதற்கு ஒன்றுகூடக் கூடாது" என்று கூறியுள்ளனர், ஆனால் தேவன், "சபை*

கூடி வருகிறதைச் சிலர் விட்டுவிடுகிறது போல நீங்களும் விட்டு விடாதீர்கள்" (எபி. 10:25) என்று கூறினார். மனிதர்கள், "உங்கள் அண்டை அயலாருக்கு வேதாகமத்தைப் பிரசங்கிக்கக் கூடாது" என்று கூறியுள்ளனர், ஆனால் தேவன், "சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற். 16:15) என்று கூறினார். முரண்பாடு தெளிவாய் உள்ளபோது, தேவனுடைய சித்தத்திற்கு தம்மை ஒப்புக்கொடுத்தவருக்குத் தேர்ந்து கொள்ளும் வாய்ப்பு எதுவும் இல்லை. "எது விரும்பத் தக்கது?" என்றோ அல்லது "எது புகழ் மிக்கது?" என்றோ அல்லது "எது பாதுகாப்பானது?" என்றோ அவர் கேட்க முடியாது. அவர் "எது சரியானது?" என்று மட்டுமே கேட்டு - அதன்படி செயல்பட முடியும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில், இன்றைய நாட்களில், பல நம்பிக்கைகள் "அரசியல் ரீதியாகச் சரியற்றவைகளாய்" ஆகியுள்ளன. சில விஷயங்களில், குற்றத்தைத் தவிர்ப்பதற்காக, நாம் மக்களின் போக்கை[2] பின்பற்ற முடியும், அவ்வாறு பின்பற்றுவதும் அவசியமே. ஆயினும், "அரசியல் ரீதியாகச் சரியற்றதாய்" உள்ளவைகள் எல்லாமே வேதாகமத்தின்படியே யும் சரியற்றதாய் இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, ஓரீனச் சேர்க்கையைக் கண்டனம் செய்வது "அரசியல் ரீதியாக சரியற்றதாய்" உள்ளது, ஆனால் வேதாகமம், ஓரினச் சேர்க்கை என்பது தேவனுடைய பார்வையில் அருவருப்பானது என்று போதிக்கின்றது (லேவி. 18:22; 20:13; 1 கொரி. 6:9, 18ஐக் காணவும்). தேவனுடைய ஆலோசனை முழுவதையும் பிரசங் கிக்க, ஓரினச் சேர்க்கையானது மாமிசத்தின் கிரியை, அது நமது ஆத்துமாவைத் தண்டனைக்குள்ளாக்கும் (கலா. 5:19-21) என்று வெளிப்படுத்த நாம் தயங்கக் கூடாது. ஓரினச் சேர்க்கையாளர் களை மனந்திரும்பி தங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ளும்படியாக[3] நாம் அழைப்பு விடுக்க வேண்டும். "அரசி யல் ரீதியாக எது சரி?" என்பதல்ல ஆனால் "வேதாகமத்தின்படி போதிக்கப்படுவது என்ன?" என்பதே இங்கு கேள்வியாக இருக்க வேண்டும்.

மற்ற விஷயங்களில், தனிநபருடைய மனச்சாட்சி ஈடுபட்டுள்ளது. மனச்சாட்சி என்பது தேவனால் நமக்குத் தரப் பட்டு, எது சரி எது தவறு என்பதை நாம் கூற உதவுவதாகும். மனச்சாட்சியானது, சில விஷயங்கள் தவறானவை என்பதைத்

தானாகவே உணருகின்றது; மற்ற விஷயங்களில் மனச்சாட்சியைப் பயிற்றுவிக்க வேண்டியது அவசியமாகிறது. சில சமயங்களில், முரண்பாடுகள் எழுகின்ற சில விஷயங்களில் "கர்த்தர் இவ்வாறு கூறுகிறார்'' என்பதற்குத் தெளிவான ஆதாரம் இருப்பதில்லை. அப்படிப்பட்ட விஷயங்களில், வசனங்களின் வெளிச்சத்தில் கிறிஸ்தவர்கள், அவ்விஷயத்தை நன்கு ஆராய்ந்து பார்த்து, ''நம் மனதில் முழு நிச்சயமுடையவர்களாக'' வேண்டும் (ரோமர் 14:5), பிறகு தமது தீர்மானத்திற்கேற்ற[4] வாழ்க்கை வாழவேண்டும். ஆகவே, சில வேளைகளில் கிறிஸ்தவர்கள், "வல்லமைகள் இப்படியுள்ளன", "மனச்சாட்சியோடு நான் இதையோ அல்லது அதையோ செய்ய முடியாது" அல்லது ''இதையோ அல்லது அதையோ செய்வது எனது மனச்சாட்சியை மீறுவதாயுள்ளது"[5] என்று கூற வேண்டியிருக்கிறது.

அதிகாரமுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்பது என்பது தேவனுடைய பார்வையில் மிக மோசமான ஒரு செயலாய் இருப்பதால், நீங்கள் எதை விரும்பவில்லை என்பதையும், தேவன் எதை விரும்புவதில்லை என்பதையும் வேறுபடுத்திப் பார்ப்பதில் எச்சரிக்கையாயிருங்கள். ஒரு சட்டத்தை நீங்கள் தனிப்பட்ட முறையில் விரும்பவில்லையென்றால், உங்கள் மேட்டிமை மற்றும் முரட்டுத்தனம் ஆகியவற்றை விழுங்கிவிட்டு, தாழ்மையோடு கீழ்ப்படியுங்கள். ஆயினும், ஒரு குறிப்பிட்ட சட்டமானது தேவனுடைய சித்தத்திற்கு முரண்பாடானது என்று உங்கள் மனதில் முழு நிச்சயம் ஏற்பட்டால், உங்கள் நிலையில் உறுதியாய் நில்லுங்கள் - ஆனால் அதற்குரிய விலையைச் செலுத்தத் தயாராய் இருங்கள். பேதுரு மற்றும் மற்ற அப்போஸ்தலர்களின் வார்த்தைகளை உங்கள் இருதயத்தில் எழுதுங்கள்: "மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது" (5:29) - "நம்மால் முடிந்தால்" அல்லது "நமக்கு நல்லதென்றால்" அல்ல, ஆனால் "நாம் கட்டாயம் இதைச் செய்ய வேண்டும்." சிறையில் அடைக்கப்பட்டு, பயமுறுத்தப்பட்டபோது, அவர்கள் "நாங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும்" என்று பதில் அளித்தனர். கொலை செய்யப்படப் போவதாக பயமுறுத்தப்பட்ட வேளையிலும் அவர்கள், "நாங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும்" என்று பதில் அளித்தனர்.

# அடிப்படையான கொள்கை: எல்லா நேரங்களிலும் அதிகாரத்திற்கு மரியாதையைக் காண்பியுங்கள்

மூன்றாவது கொள்கையானது மிகவும் அடிப்படையானதும் மற்றும் மிகவும் கடினமானதும் ஆகும்: எல்லா நேரங்களிலும் (ஒரு குறிப்பிட்ட சட்டத்திற்கு மனச்சாட்சியின்படி நாம் கீழ்ப்படியக்கூடாத ஒரு சூழ்நிலையிலும்), அரசாங்க அதிகாரிகளுக்கு நாம் மரியாதையைக் காட்ட வேண்டும். அதிகாரம் 4ல் பேதுருவும் யோவானும் ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக மரியாதையுடன் நடந்து கொண்டனர். அதிகாரம் 5ல் பேதுருவையும் மற்ற அப்போஸ்தலர்களையும் அதிகாரிகள் கைது செய்ய வந்தபோது, அவர்கள் எதிர்த்து நிற்கவில்லை; அவர்கள் அதிகாரிகளுக்கு மரியாதை செலுத்தினர். மேலும் பேதுரு "இராஜாவைக் கனம்பண்ணுங்கள்" (1 பேது. 2:17) என்று அறைகூவல் விடுக்கின்றார்! இது, நாம் அரசாங்கத்துடன் செயல் புரிகிற ஒவ்வொரு விஷயத்திலும் (மனச்சாட்சியின்படி நாம் கீழ்ப்படியக் கூடாதிருக்கிற ஒரு சட்டத்தைத் தவிர), நாம் மிகுந்த மரியாதையுடனும், கண்ணியத்துடனும், மேலான கீழ்ப்படிதலுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று பொருள்படுகின்றது! நல்மனசாட்சியுடன் நாம் கீழ்ப்படியக் கூடாத ஒரு சட்டம் இருக்குமென்றால், நாம் முரட்டாட்டத்தால் அல்ல, தேவனுக்குக் கீழ்ப்படிய விரும்புவதாலேயே அச்சட்டத்திற்குக் கீழ்ப்படிய முடியாமல் உள்ளது என்பதைத் தெளிவாக்க எல்லா வகையிலும் தாழ்மையுடன் முயற்சி செய்ய வேண்டும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில், கருக்கலைப்பு[6] பற்றி கசப்பான முரண்பாடுகள் எழுகின்றன. கருக்கலைப்பு என்பது தேவனுடைய சித்தத்தை மீறும் ஒரு செயல் என்று இருதயத்தில் நான் முழுமையாக நம்புகின்றேன். அதே வேளையில், "பைத்தியத்தின் எல்லை" யாக "வாழ்வதற்கு உரிமை" என்ற இயக்கத்தின் செயல்பாடுகள் இருப்பதைக் கண்டு நான் திகைப்படைகின்றேன். கருக்கலைப்பில் விசேஷப் பயிற்சி பெற்ற மருத்துவர் ஒருவரை, ஒரு தனி நபர் கொலை செய்த செய்தி வெளியாகி

யுள்ளது. இன்னொரு தனி நபர், கருக்கலைப்பு மருத்துவ மனையில் புகுந்து, அங்கு தான் கண்ட மக்கள் யாவரையும் கொலை செய்ய முயன்றுள்ளார். இந்த தனி நபர்கள் தாங்கள் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதாக நம்பியிருக்கலாம், ஆனால் உண்மையில், கருக்கலைப்பிற்கெதிரான நிலைக்கு இவர்கள் சரி செய்ய முடியாத துன்பத்தையே விளைவித்துள்ள னர். கருக்கலைப்பை ஒழிப்பதற்கு[7] சரியான மற்றும் தவறான வழிகள் உள்ளன; அவர்கள் தவறான வழியைத் தேர்ந்து கொண்டனர். இதன் விளைவாக, கருக்கலைப்பிற்கு எதிராக இருப்பதில் ஒருவர் அப்பாற்பட்டவராய் இருக்க வேண்டும் என்ற கருத்து பலருடைய மனங்களில் ஏற்பட்டது.

தேவனைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் அநேகர் ஒழுக்கமற்ற அல்லது கொள்கையற்ற விஷயங்களைச் சந்திக் கின்றனர். அவர்கள் அதிகாரிகளைத் தாக்கி, சொத்துக்களை அழித்து, கலகத்தை ஊக்குவிக்கின்றனர். அரசாங்கம் அவர்களுக் கெதிராகச் செயல்பட்டு தண்டனை அளிக்கையில், அவர்கள் தங்களை, மார்க்கத்திற்காக உயிர் துறப்பவர்கள் என்று பெய ரிட்டுக் கொள்கின்றனர். இதற்கு முரண்பாடாக, பவுல் பின் வருமாறு தீத்துவுக்கு எழுதினார்:

> துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்கவும், சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கவும், ஒருவனையும் தூஷியாமலும், சண்டை பண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்த குணத்தைக் காண்பிக்கவும் அவர் களுக்கு (கிரேத்தாத் தீவின் கிறிஸ்தவர்களுக்கு) நினைப் பூட்டு (தீத்து 3:1, 2).

அப்போஸ்தலர்கள் வல்லமை வாய்ந்த சனதெரீன் சங்கத்தாருடன் கொண்டிருந்த உறவை மறுபடியும் கவனியுங் கள். ஆலோசனைச் சங்கத்தின் முன்பாக அவர்கள் தைரியத் தோடு ஆனால் வெறுப்பின்றி இருந்தனர். பிரசங்கிக்கக் கூடா தென்று கட்டளையிடப்பட்டபோது அவர்கள் ஆலோசனைச் சங்க உறுப்பினர்கள்மேல் குற்றம் சாட்டும் புகாரைக் கொடுக்க வில்லை அல்லது ஒரு மறுப்பு விளக்கம்[8] தரவில்லை அல்லது தேவாலயத்தை எரித்து விடவில்லை. அவர்கள் தொடர்ந்து

*பிரசங்கித்துக் கொண்டு, அதனால் வரும் விளைவுகளை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருந்தனர்.*

*கீழ்ப்படிதலின் எல்லா பகுதிகளுக்கும் நாம் கலந்துரை யாடும் இக்கொள்கை நடைமுறைப் படுத்தப்பட முடியும். புதிய ஏற்பாட்டில், அதிகாரத்திற்குக் கீழ்ப்படிதலைப்பற்றி அதிகமாய்க் கூறப்படுகிறது:*[9] மனைவிகள் தங்கள் கணவர் களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் (எபே. *5:22-24;* கொலோ. *3:18; 1* பேது. *3:1-6).* பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும் (எபே. *6:1-3;* கொலோ. *3:20).* வேலைக்காரர்கள் தங்கள் எஜமானர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் (எபே. *6:5-8;* கொலோ. *3:22-24).*[10] கிறிஸ்தவர்கள் என்ற முறையில் நமது பிராந்திய சபையின் மூப்பர்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் (எபி. *13:17).* எல்லா அதிகாரத்திற்கும் நாம் கீழ்ப்படிய வேண்டும், அது நாம் படிக்கின்ற பள்ளியின் முதல்வர் மற்றும் ஆசிரியர்களானாலும் அல்லது நாம் பணியாற்றும் நிறுவனங் களின் மேலதிகாரிகளாக இருந்தாலும் யாவருக்கும் நாம் கீழ்ப்படிய வேண்டும் (தீத்து *3:1).*

மேலே கூறப்பட்ட எல்லா உறவு முறைகளிலும், தேவனு டைய வசனத்திற்கு விரோதமான சிலவற்றைச் செய்யும்படி நமக்குக் கூறப்படக்கூடிய சாத்தியம் உண்டு. ஒரு கிறிஸ்தவ மனைவி தனது கணவனால், தேவபக்தியற்ற ஒரு செயலில் பங்கேற்கும்படிக் கேட்கப்படலாம். கிறிஸ்தவர்களல்லாத பெற்றோர் தங்கள் பிள்ளையிடம், சபை தொடர்பான எச்செயலையும் செய்யக் கூடாதென்று தடை விதிக்கலாம். ஒரு முதலாளி, வியாபார நடவடிக்கையில் உள்ள சட்ட விரோத மான செயல்களை நாம் கண்டுகொள்ளாமல் இராவிட்டால், வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டு விடுவோம் என்று தெளிவாகக் கூறியிருக்கலாம். இந்தச் சூழ்நிலைகள் ஏற்படும் போது, "நாம் மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் தேவனுக்கே கீழ்ப்படிய வேண்டும்."

*எஞ்சியுள்ள காலத்தில், நாம் கிறிஸ்துவுக்காக நிலைநிற்றல்* விரும்பத்தக்க விளைவுகளைக் கொடுக்க, நாம் கடமை உணர்வுடன் கீழ்ப்படிய வேண்டும். கிறிஸ்தவரல்லாத தனது கணவரின் விருப்பங்களுக்கு கிறிஸ்தவ மனைவி குறைந்த அளவே கவனத்தை காட்டினால், "உங்களுடன் மீன் பிடிக்க

வருவதற்குப் பதில் நான் சபை ஆராதனைக்குச் செல்கிறேன்" என்று அவள் உறுதிப்பாட்டுடன் சொல்லும்போது அது அவள் மேல் அவருக்கு மதிப்பை ஏற்படுத்தாது. அது அக்கணவருக்கு வெறுப்பூட்டுவதற்காகக் கூறப்பட்டதுபோல் இருக்கும். கிறிஸ்தவப் பிள்ளைகள், பொதுவாகக் கிறிஸ்தவரல்லாதவர் களாய்த் தங்கள் பெற்றோர் இருப்பினும் அவர்களிடம் மரியாதை காட்ட வேண்டும், இல்லாவிடில், அவர்களின் விருப்பத்திற்கு மாறாக அப்பிள்ளைகள் ஆராதனையில் கலந்து கொள்வதை அப்பிள்ளையின் முரட்டாட்டத்தின் வெளிப் பாடு என்பதாக அவர்கள் காண்பார்கள். இது போலவே சபை உறுப்பினராக உள்ள ஒரு வேலைக்காரர் மற்றும் பள்ளி மாணவர், தொழில் நிறுவன உறுப்பினர் ஆகியோரின் நிலையும் இருக்க வேண்டும்.

கர்த்தருக்கென்று நேர்மறையான விளைவை ஏற்படுத்த நாம் விரும்பினால், தேவனுடைய சித்தத்தில் வெளிப்படுத்த பட்டவைகளுக்கு முரணானவைகளைத் தவிர மற்ற எல்லா வற்றிற்கும் இனிமையாகக் கீழ்ப்படியக் கற்றுக்கொள்ள வேண்டும்.

## முடிவுரை

நான் இதை முடிக்கையில் இப்பாடத்தின் மையப்பகுதிக்கு மறுபடியும் திரும்ப விரும்புகின்றேன், அது 5:29ல் உள்ள பேதுரு மற்றும் இருந்தவர்களின் வார்த்தையாகிய பகுதியாகும்: "நாம் மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் தேவனுக்கே கீழ்ப்படிய வேண்டும்."

சபையின் தொடக்க நாட்களில். சபையின் உறுப்பினர்கள் சிலர், கிறிஸ்தவர்களாயிருந்ததால் தங்கள் மீது செலுத்தப்பட்ட தாக்கத்தை தெர்த்துலியன் என்ற ஒரு தலைவரிடம் முறை யிட்டனர். "அதிகாரிகளோடு நாம் ஒத்துப் போகாவிட்டால் முதலில் நமது வேலைகள் பறிக்கப்படும், பின்பு நாம் உயிர்துறக்க நேரிடும்.தேவன் இதை நிச்சயமாக விரும்ப மாட்டார். ஏனென்றால் நாமும் நமது குடும்பங்களும் வாழ வேண்டுமே" என்றனர். தெர்த்துலியன் அவர்களை ஒரு கணம் உற்று நோக்கிவிட்டு, "*நாம் வாழ வேண்டுமா?*" என்று கேட்டார்.

*நமது வாழ்க்கையில் நாம் அநேக "வேண்டும்" என்பவை களை அறிமுகப்படுத்திக் கொண்டோம்: நமக்கு சில சொத்துக் கள் வேண்டும், நாம் வெற்றியடைய வேண்டும், நாம் மகிழ்ச்சி யாயிருக்க வேண்டும், இன்னும் பல. உண்மையில் வாழ்க்கை யில் ஒரு சில "வேண்டும்" என்பவைகளே முக்கியமானவை களாகும், இது ஒன்று: "நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும்."*

குறிப்புகள்

[1]யாத். 20:13, பத்துக் கட்டளைகள் கொடுக்கப்படுவதற்கு நீண்ட காலம் முன்னதாகவே கொலை என்பது தேவனுடைய சித்தத்தை மீறியது (ஆதி. 4:8-15). [2]"எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்" (1 கொரி. 9:22) என்பதே கொள்கையாகும். உதாரணமாக, தமிழ் பேசுபவர்கள் தமிழர்கள் என்று அழைக்கப்படுவதை விரும்பினால் நாம் அச்சொற்றொடரைப் பயன்படுத்த வேண்டும். [3]இதைப்பற்றியோ அல்லது வேறு எந்தப் பொருள்பற்றியோ இடைவிடாமல் பிரசங்கிப்பது நமது பழக்கமாக வேண்டும் என்று நான் கூறவில்லை. பாலியல் ரீதியான பாவங்களைப்பற்றிப் பிரசங்கிக்கும்போது, அதில் ஓரினச் சேர்க்கைபற்றி பேசத் தயங்கக் கூடாதென்றே நான் கூறுகிறேன். [4]முடிவெடுக்கும் விஷயங்களில், நம்மோடு ஒத்துப் போகாத சகோதரர் ஒருவரை நாம் கண்டனம் செய்யக் கூடாது என்றும் ரோமர் 14 தெளிவாக்குகின்றது. இவை முடிவெடுக்கும் விஷயங்களேயன்றி, விசுவாசம் தொடர்புடையவைகள் அல்ல என்பதைக் கவனியுங்கள் (அதாவது, தேவன் தமது சித்தத்தைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ள விஷயங்கள்). [5]யுத்தத்திற்குச் செல்லுதல் ஒரு எடுத்துக்காட்டு ஆகும். சில கிறிஸ்தவர்கள் "மனச்சாட்சியில் மறுப்பவர்கள்" ஆகின்றனர்; இவர்களில் சிலர் போர்ப்படையின் மருத்துவப் பிரிவு அல்லது போர் செய்யாத மற்ற துறைகளில் பணியாற்றியுள்ளனர். அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் இதே போன்ற ஆளுகை அமைப்புள்ள மற்ற நாடுகளில், ஒருவர் தமது மனச்சாட்சியை மீறும்படிக்கு வற்புறுத்தலாகாது என்று சட்டம் கூறுகிறது. சட்டத்தில் இத்தகைய பாதுகாப்பு இருந்தாலும், அரசின் பிரகடனத்திற்குக் கீழ்ப்படிய மறுக்கும்போது அதன் விளைவுகள் உண்டாகும். [6]நீங்கள் கடல் கடந்த நாடுகளில் வசித்தால், உங்கள் பகுதிக்குப் பொருத்தமான விளக்கத்தை இதற்குப் பதில் பயன்படுத்தலாம். உங்கள் நாடுகளில் "பைத்தியத்தின் எல்லை" யான செய்கையால் பாதிக்கப்பட்ட, மதிப்புள்ள இயக்கம் ஏதேனும் நிச்சயம் இருக்கும். [7]கல்வி, சட்டம் இயற்று தல் மற்றும் வாழக்கூடிய மாற்றுக்கள் அளித்தல் போன்றவை சாத்தியமான அணுகுமுறைகள் ஆகும். [8]விளக்கப்படுத்துதல் என்பது வசனரீதியற்ற தாயிருப்பதைக் காட்டிலும், முன்னுரிமை அளிப்பதையே முக்கியமாகக் கொண்டுள்ளது. விளக்கப்படுத்துதல் என்பது சட்டரீதியானதாகவும், பண் பட்டதாகவும் இருந்தால், தனியொரு கிறிஸ்தவர் அதில் பங்கேற்கலாம்.

ஆயினும், அப்போஸ்தலர்கள் இவைபோன்ற எதையும் செய்யவில்லை. அதிகாரிகளை வற்புறுத்துவதைப் பார்க்கிலும் ஆத்தும இரட்சிப்பே முக்கியம் என்று அவர்கள் எண்ணியது உறுதி. மோசமான அரசாங்கம் உள்ள நாடுகளிலும் மனிதர்கள் பரலோகம் செல்ல முடியும்; ஆனால் கிறிஸ்து இல்லாமல் அவர்கள் பரலோகம் செல்ல முடியாது. [9]வேதத்தில் கீழ்ப்படிதல் என்பதன் பாடமானது அதிகாரத்திற்குக் கீழ்ப்படிவது என்பதைக் காட்டிலும் விரிவானதாக உள்ளது (எபே. 5:21ஐக் கவனியுங்கள்), ஆனால் நாம் இங்கு அதிகாரத்துக்குக் கீழ்ப்படிதல் என்ற பாடத்தையே கவனத்தில் கொள்கிறோம்.[10] இவ்வசனப்பகுதிகள் ஒரு அடிமை தனது எஜமானருக்குக் கீழ்ப்படிவதையே குறிப்பாக உணர்த்துகின்றன. ஆனால் பொதுவாக இது வேலை பெறுபவர் - வேலை தருபவர் இவர்களுக்குள்ள உறவுக்குப் பயன்படுத்தப்படலாம்.

# மனச்சாட்சி

*மனச்சாட்சி என்பது நமக்குள்ளாக இருந்து, சில செயல்கள் நல்லது என்றும், சில செயல்கள் கெட்டது என்றும் நமக்குக் கூறும் உள்ளுணர்வு ஆகும் (ரோமர் 2:15, 16). (மனசாட்சியானது தன் கடமைகளை நிறைவேற்றக் கூடாதபடிக்குக் கடினமடையக் கூடிய சாத்தியக்கூறு உள்ளது 1 தீமோ. 4:1ஐக் காணவும்.) நாம் நல்லவைகளைச் செய்யும்படி நம்மை ஊக்குவிப்பதற்காகவே தேவன் நமக்கு மனசாட்சியைக் கொடுத்தார். சில விஷயங்கள் தவறானவை என்று மனச்சாட்சி தானாகவே அறிகின்றது. (எடுத்துக்காட்டாக, எல்லா சமூகங்களிலும்-குறைந்த பட்சம் அந்தச் சமூகத்திற்குள்-கொலை செய்வது தவறு என்று கருதப்படுகின்றது. ரோமர் 2ல் கூறப்படும் கருத்து யாதெனில், நல்லது மற்றும் கெட்டது என்பதை உணரும் உணர்வு யாவருக்குள்ளும் உள்ளது என்றாலும், எவர் ஒருவருடைய வாழ்க்கையும் அவரது இந்த உணர்வுக்கு முற்றிலும் ஒத்து சீராக இருப்பதில்லை. ஆகவே, எல்லாரும் - வேதவசனங் களுக்குப் பழக்கமில்லாதவர்களும் கூட - பாவிகளே.) ஆயினும், மற்ற விஷயங்களில் மனச்சாட்சியானது பயிற்றுவிக்கப்பட வேண்டும்.*

*மனச்சாட்சியானது சரியற்ற விதத்தில் பயிற்றுவிக்கப்பட முடியும். கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தியபோது, பவுல் தமது மனச்சாட்சியை மீறி நடக்கவில்லை (23:1), ஏனெனில் அவர் கடந்த காலத்தில் பெற்ற உபதேசத்தின்படி, தேவனுடைய சித்தத்தைச் செய்து வந்தார். உங்கள் மனச்சாட்சி சரியாகவோ அல்லது தவறாகவோ, எப்படிப் பயிற்றுவிக்கப் பட்டிருப்பினும், நீங்கள் அதற்கு முரண்பாடாகச் செயல்படக் கூடாது (இ.வ. ரோமர் 14:20-23), ஏனெனில் அப்படிச் செய்தால், நீங்கள் அதை மரத்துப்போகச் செய்பவர்களாயிருப்பீர்கள். இவ்வாறு நீங்கள் தொடர்ந்து செய்து வந்தால், மனச்சாட்சியானது உணர்ச்சியற்றுப் போய், தேவனால் அதற்களிக்கப்பட்ட பணியை நிறைவேற்ற முடியாமல் போய்விடும், இதற்கு, நாம் கிறிஸ்தவர்களாகும்போது, கிறிஸ்தவரல்லாத நிலையில் நாம் போதிக்கப்பட்டிருந்த மூட நம்பிக்கைகளை விட்டுவிடக் கூடாது என்று பொருளல்ல. வசனத்தின் வெளிச்சத்தில் நம்முடைய மனச்சாட்சியை மறுபடியும் பயிற்றுவிக்க நாம் கவனத்துடன் கற்க வேண்டும்; இது நம்மை நமது கடந்த கால விலங்குகளில் இருந்து விடுதலையாக்கும் (யோவா. 8:32). தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் கர்த்தருடைய தரிசனம் பவுலின் மனச்சாட்சியைச் சரிப்படுத்தி, மறு உருவாக்கிற்று. நாமும் நமது மனச்சாட்சி மறுபடியும் பயிற்றுவிக்கப்படும் வரையில் அதை மீறாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.*